1996 பிப்ரவரி 28]

துணை மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் எர்த் கனெக்ஷன் பற்றி சிற்சில பிரச்சினை இருக்கிறது. அது எங்கள் கவனத்திற்கு வந்தவுடன் சரிசெய்யப்பட்டது. பொதுவாக எர்த்மேட் இல்லாமல் எந்த துணை மின் நிலையமும் செயல்படுவது கிடையாது. ஏனென்றால், வானத்திலே மின்னல் வந்து இடி வந்தால் அந்த எர்த்மேட் வழியாகத்தான் அப்சார்ப் செய்ய முடியும். அது தவிர, இங்கே மின்சாரம் வழங்குவதில் பிரச்சினை ஏற்படுகிற நேரத்தில், இந்த எர்த்மேட்தான் பயன்படுகிறது. நாம் அதைப் பராமரிக்கிற போது பிரச்சினை ஏதும் வந்தால், லீக்கேஜ் ஆனாலும், நம்முடைய கவனத்திற்கு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்போது நெத்திமேடு பகுதிகளில் நடவடிக்கை எடுத்து மார்ச் '95-ல் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டுவிட்டன. திட்ட மதிப்பீடு தயாரிக்கும்போதும், பாதுகாப்பு கருதியும் எர்த்மேட் இல்லாமல், எந்த துணை மின் நிலையமும் இயங்குவதில்லை. எல்லா துணை மின் நிலையங்களும் எர்த்மேட் உள்ளது. எதாவது சிறு சிறு பிரச்சினைகள் இருந்தால், அது அரசின் கவனத்திற்கு வரும்போது, அதை உடனடியாக சரி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 150, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை. வினா எண் 151 திரு. சி.சுவாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

151—

மானியத்துடன் உரம் வழங்குதல்

***35464—**திரு.சி.சுவாமிநாதன் :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மை விளைபொருள் இணையகம் 'தாய்' நிறுவனத்தின் மூலம் நடப்பாண்டில் மானியத்துடன் உரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பாண்டில் வேளாண்மை விளைபொருள் இணையம் 'தாய்' நிறுவனத்தின் மூலம் மான்யத்துடன் உரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

[1996 பிப்ரவரி 28

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விளைபொருள் இணையத்தின் ('தாய்') மூலமாக, 1992-93-ல் தமிழகத்தில் இருக்கிற அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு பிரைவேட் ஏஜென்சி மூலம் அவர்களை நியமனம் செய்து, அந்த ஏஜென்சிகளுக்குத் தமிழகத்தில் இருக்கின்ற சிறு, குறு விவசாயிகளுக்கு 20 சதவீத மானியத்துடன் உரம் வழங்கப்பட்டது, அது மார்க்கெட் நிலவரத்தை விட விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பட்ட காரணத்தால், மிகுந்த உற்சாகத்தோடு விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட அது மிக நன்றாக அமைந்திருந்தது. அது விவசாயிகளுடைய வளர்ச்சிக்கும் பாதுகாப்பாக அமைந்திருக்கிறது. அதை என்ன காரணத்திற்காக—அந்த 'தாய்' ஸ்தாபனம் மூலம் அந்த ஏஜென்சியை நிறுத்தியிருக்கிறீர்கள் என்றும், அதை மீண்டும் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 93-94-ஆம் ஆண்டு வரை 'தாய்' நிறுவனம் மூலம் இந்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 94-95-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு உரத்திற்கு தந்த மானியத்தை நேரடியாக உர உற்பத்தியாளர்களுக்குத் தந்துவிட்ட காரணத்தினால் மானியத்தை தமிழக அரசால் தரமுடியாத சூழ்நிலையை மத்திய அரசு உருவாக்கியது. எனவே தரமுடியாத நிலையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தமுடியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்ல கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். இதே கருத்தை மத்திய அரசுக்கும் அவர்கள் வலியுறுத்தி அந்த மானியத்தை தமிழக அரசின் மூலமாகத் தருவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தால் நலமாக இருக்கும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு 'தாய்' ஸ்தாபனத்தின் மூலமாக உரம் வழங்கியதாக ஒப்புக் கொண்டமைக்கு மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு, அந்த உரம் இப்போது நேரடியாக உர உற்பத்தியாளர்களுக்கும் கொடுக்கப்பட்டு, அதில் மானியம் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எப்படி வந்தாலும் மத்திய அரசு தன்னுடைய மானியத் தொகையை குறைக்கவில்லை. அவர்கள் வேறு துறையின் மூலமாக அந்த மானியத்தை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த 'தாய்' ஸ்தாபனம் முறையாகச் செயல்படுவதற்கு தமிழக அரசு மானியத் தொகையில் கூட உரத்தைக் கொடுத்து, அதை மீண்டும் துவங்குமா? அந்த 'தாய்' ஸ்தாபனம் இந்த விவசாயிகளுக்காக மற்றும்

1996 பிப்ரவரி 28]

ஏதேனும் பணிகளை இப்போது தொடங்கிச் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்' நிறுவனம் உரிமை பெற்ற ஒரு வர்த்தக நிறுவனம். மத்திய அரசு உரத்திற்கு வேண்டிய மானியத்தை உர தயாரிப்பாளர்களுக்கு நேரடியாகத் தருகிறது. எனவே அவர்களிடத்திலே 'தாய்' நிறுவனம் உரத்தைப்பெற்று தன்னுடைய முகவர் மூலமாகத் தந்தால் அதிலே எந்தவித பயனும் உழவர்களுக்குச் சென்று அடையமுடியாது. எனவேதான் உர வியாபாரத்தை 'தாய்' நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்திவிட்டது. ஆனால் அதே நேரத்திலே வேளாண்மையைச் சார்ந்த தொழிலைத் துவங்குவதற்கு யார் ஒருவர் தமிழகத்திலே முதலீடு செய்வதற்கு முன்வந்தாலும் அவரோடு கூட்டாக அந்தத் தொழிலை இணைந்து நடத்துவதற்கு இன்றைக்கு முயற்சிகள் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 152, டாக்டர் வெ.சரோஜா, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

152—

பால் வினியோகத்தை மேம்படுத்துதல்

** 61672—டாக்டர் வெ.சரோஜா:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி நகரில் ஆவின் பால் வினியோகம் செய்யும் முறையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.தே.ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சங்ககிரியில் நாளொன்றுக்கு 450 லீட்டர் பாக்கெட் பால் பொதுமக்களுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் தினசரி அளவான 450 லிட்டரை, 1000 லிட்டராக உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.